1972 ஆகஸ்ட் 18]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 133.

(இ) 42 மாணவர்கள் ரூ. 25,800. இது தவிர 1970-71-ம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு 1971-72-ம் ஆண்டில் உபகாரச் சம்பளம் வேண்டி புதிப்பித்த 44 மாணவர்களுக்கு ரூ 30,500 உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டது. ஆக 86 உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு ரூ. 56,300 வழங்கப்பட்டது.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவரவர்களே. 133 பேர்கள் உடல் ஊனமுற்றவர்கள் இருந்தாலும், அதிலே 86 பேர்களுக்குத் தான் உபகாரச் சம்பளம் கிடைத்திருக்கிறது. மீதிப் பேர்களுக்குக் கிடைக்கவில்லை. அப்படி கிடைக்காததற்குக் காரணம் என்ன என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். உபகாரச் சம்பளம் வழங்கும்போது, உடல் ஊனத்தைப் பொறுத்து எடுத்துக் கொள்கிறார்களா அல்லது பள்ளியில் பெறுகிற மதிப்பெண்களைப் பொறுத்து தேர்ந்தெடுக்கப்படு கிறார்களா என்றும் அரசு உடல் ஊனமுற்ற மாணவர்கள் அனைவருக்கும் உதவி வழங்க முன்வருமா என்றும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, கிட்டத்தட்ட 112 மாணவர்களுக்கு உதவி அளிக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு கலைப் பிரிவில் 36 பேர்களுக்கும் பணிப்பிரிவில் (புரொபெஷனல் கோர்ஸ்) 20 பேர்களுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. விழி இழந்தோர்களைப் பொறுத்த வரையில், கலைப் பிரிவில் 11 பேர்களுக்கும் பணிப் பிரிவில் 10 பேர்களுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. காது கேளாத வர்களுக்கு கலைப் பிரிவில் 10 பேர்களுக்கும் பணிப்பிரிவில் 10 பேர்களுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படியாக பல வகைகளில் கிட்டத்தட்ட 112 பேர்களுக்கு மொத்தம் ரூ. 74,000 கொடுக்கப்படுகிறது. கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த வகையில் 86 பேர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன்.

Government High Schools (B. Wing)

* 39 *Q*—THIRU A.R. DAMODARAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to **state—**

(*a*) the number of Government High Schools (B. Wing) which had a strength of over 1,000 students as on 2nd October 1970;

(b) whether the Headmasters of such schools are being paid as per the recommendations of the Second Pay Commission; and

(c) whether such Headmasters have been included in the list of Gazetted Headmasters?

அரசு உயர்நிலைப் பள்ளிகள் பி. பிரிவு)

திரு. ஏ. ஆர். தாமோதரன் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 2-10-1970-ஆம் நாள் நிலவரப்படி 1000 மாணவர்களுக்கு மேல் பயிலும் அரசு உயர்நிலைப் பள்ளிகளின் (பி. பிரிவு) எண்ணிக்கை யாது?

(இ) அத்தகைய உயர்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு இரண்டாவது சம்பள ஆணைக்குழுவின் பரிவுரைகளின் படி சம்பளம் கொடுக்கப்படுகிறதா?

(உ) அதுபோன்ற தலைமை ஆசிரியர்கள் அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனரா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 78.

(இ) & (உ) தற்போது அனைத்து தலைமையாசிரியர்களுக்கும் ரூ 450-25-750 என்ற விகிதத்தில் சம்பளம் அளிக்கப்படுகிறது. இறுதியான ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

THIRU A.R. DAMODARAN: Sir, is it proposed to consider the seniority of the Headmasters on a Statewide scale or District-wide scale in fixing to these gazetted posts?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தலைமை ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், மாவட்ட அளவில் தான் கணக்கிடப்படுகிறது; ஆனால் கெஜட்டட் தலைமை ஆசிரியர்களைப் பொறுத்து மாநில அளவில் கணக்கிடப்படுகிறது.

திரு கே. எஸ். அப்துல் வகாப்: தலைவரவர்களே, 1000 மாணவர்களுக்கு மேற்பட்டு உள்ள பள்ளிகளுக்கு கெஜட்டட் தலைமை ஆசிரியர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். மிகவும் குறைந்த

1972 ஆகஸ்ட் 18]

மாணவர்கள் எண்ணிக்கை உள்ள பள்ளிக்கூடங்கள் எத்தனை, அவற்றில் மிகக் குறைந்த அளவு உள்ள மாணவர்கள் எண்ணிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 1000-க்கு மேற்பட்ட மாணவர்கள் உள்ள பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை 78 என்ற கணக்கு இருக்கிறது. மிகக் குறைந்த மாணவர்கள் உள்ள பள்ளிக்கூடம் பற்றிய தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், விடை தயாரித்துக் கொடுக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, இரண்டாவது ஊதியக் குழு ஆணையை அமுல்படுத்தும் விதிகளின்படி 1-1-1971 முதல் கொடுக்கப்பட வேண்டும் என்று இருக்கிறது. அப்படி யிருந்தும் இன்னும் வழங்கப்படாமல் வேலை நெருக்கடி காரணத் தால் காலதாமதம் ஏற்பட்டுவருவதால், அவற்றை வழங்குவதற்கு ஒரு ஸ்பெஷல் ஆபீசர்-ஆவது போட்டு விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விரைவிலே அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவரும் முயற்சிகள் எடுத்து நிறைவேற்றப்படும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU M. RAJAH IYER: Mr. Chairman, Sir, the Hon. Minister was pleased to point out that this scale related to Head-masters of High Schools if more than one thousand students were there and that the Gazetted scale would be at State level. May I know, Sir, whether orders have been passed creating such posts in Government High Schools (B Wing) at the State level ?

THE HON. DR. V.R. NEDUNCHEZHIYAN : The matter of appointing the Gazetted Headmasters is under consideration of the Government.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: தலைவரவர்களே, 1000 மாணவர்களுக்கு மேல் உள்ள பள்ளிகளுக்கு எல்லாம் கெஜட்டட் தலைமை ஆசிரியர்கள் போடுவதற்கான செயற்குறிப்பு ஏதாவது

அரசிடம் உண்டா, அப்படி எத்தனை பள்ளிகள் கெஜட்டட் தலைமை ஆசிரியர்கள் போடப்படாமல் இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அது தான் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது என்று சொன்னேன். அதுபற்றி விரைவில் முடிவு எடுக்கப்படும்.

THIRU C.V. RAJAGOPAL : Will the Hon. Minister be pleased to answer whether these Headmasters are recruited directly or appointed on seniority basis? How are they appointed?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஒழுங்காகப் பள்ளியில் படித்தவர்களுக்கு இந்த விவரங்கள் நன்றாகத் தெரியும். சீனியாரிட்டியைப் பார்த்துத்தான், பணிமூப்பு நிலையைப் பார்த்துத் தான், தலைமை ஆசிரியர் பதவி வழங்கப்படுகிறது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: நண்பர் திரு. சி வி ராசகோபால் என்னுடைய 'கிளாஸ்மேட்'. அவர் 'தேர்டு பார்ட் இல் 'பெயில்' ஆகிவிட்டார். நான் மேலே போய் விட்டேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, தனியார் பள்ளிகளில் கூட சீனியாரிடியைப் பொறுத்து தலைமை ஆசிரியர் பதவி வழங்கும் முறை இப்போது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், சொல்ல முடியும். தனியார் பள்ளிகளில் அவர்களே பார்த்து பொறுக்கி நியமிக்கிறார்கள் என்று கருதுகிறேன். தனிக் கேள்வி போட்டால், அது பற்றி ஆராய்ந்து விளக்கங்கள் தர முடியும்.

Zoo

*40 Q.—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to start a zoo in or near Madurai Corporation limits; and

(b) if so, the details thereof?